# <u>செயற்குழுக் கூட்டம் (28-10-2022)</u>

இன்று (28-10-2022) நமது இயக்கப் பொது செயலாளர் தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில்,, நான்கு செயற்குழு உற்ப்பினர்களும், பார்வையாளர்களாக இரண்டு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றபட்டன.

1. இயக்கத்தின் செப்டம்பர் மாத வரவு செலவு கணக்கு வாசிக்கப்பட்டது. வரவு செலவு கணக்கு சரிதானென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2. சென்ற நிர்வாகக்குழுக் கூட்டத்தில் கூறியபடி அனைத்து மாவட்டங்கள், மற்றும் கிளைளுக்கு மூண்றாண்டு வரவு செலவு கணக்குகள், உறுப்பினர் முதலியவற்றைக் கேட்டு கடிதங்கள் எழுதப்பட்டன. அவற்றில் ஒன்றுக்குக் கூட பதில் வரவில்லை.. எனவே, அனைத்து மாவட்டங்கள்/ கிளை அலுவலர்களுக்கு மீண்டும் ஒரு கடிதம் எழுதுமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது. எந்த ஒரு பதிலும் கிடைக்கப் பெறாவிடில், 31/12/2022 அன்று அந்தந்த மாவட்டங்கள்/ கிளைகளை மூடுவதற்கு ஆவணை செய்ய முற்பட வேண்டும்

3. கீழ்க்கண்ட விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு ஆயுள் உறுப்பினர்களாக இக்குழு அங்கீகரிக்கிறது:-

1) 578 : திரு V. பரமேஸ்வரன்
2) 579 : திரு S. கண்ணப்பன் ( ஆண்டு உறுப்பினரிலிருந்து ஆயுள் உறுப்பினராக)
3) 580 : திரு S .பழனிச்சாமி
4) 581 : திரு V காசிநாதன்
5) 582 : திரு K. கணபதி வேலாயுதம்

4. கீழ்க்கண்ட விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு ஆண்டு உறுப்பினர்களாக இக்குழு அங்கீகரிக்கிறது:-

1) திரு P. பாலசந்தர்
2) திரு A பெருமாள்
3) திரு S வெற்றி வேல்
4) திரு J யுவராஜா
5) திரு A J. ராஜேந்திரன்
6) திரு C. நாகராஜன்
7) திரு ராதாகிருஷ்னன்

5. தரமான, நேர்மையான வணிகர்களிடமிருந்தும், சமூக நோக்கம் கொண்ட மருத்துவர்கள் போன்றவர்களிடமிருந்து விளம்பரங்கள் பெற்று நேர்மை நெறியில் வெளியிட வேண்டுமென்றும் அதைக்கொண்டு நமது இயக்கத்தின் நிதி நிலையை மேம்படுத்த வேண்டும் எனவும் ஆலோசிக்கப்பட்டது.

6. மாவட்ட பொறுப்பாளர்களின் பெயர் மற்றும் தொலைபேசி எண்களை நேர்மை நெறியில் வெளியிடுமாறு ஆலோசிக்கப்பட்டது. முடிவில், செயற்குழு உறுப்பினர்கள் அனைவரின் பெயரையும் தொலைபெசி ஏண்களையும் பிரசுரிக்குமாறு முடிவாகியது.

7. எல்லா மாவட்டங்களிலும், கிளை அமைப்புகளிலும் உறுப்பினர்கள் அவரவர் சூழ்நிலைக்கேற்ப STIKER COMPAIGN **அமைப்பு பிரசுரம்** அல்லது விளம்பர ஒட்டி, இயக்கத்தை முன்னிறுத்த வேண்டும். டிசம்பர் 10ம் நாள் ஊழல் எதிர்ப்பு தினமாகக் கொண்டாட வேண்டும்..

8. அலுவலகத்தொடர்புக்கு தனியாக ஒரு தொலைபேசி எண் தேவைப்படுகிறது.

9. அரசு அலுவலகங்களில் மக்கள் கோரிக்கை மனுக்களை விரைவில் தீர்க்கும் வகையில் அரசின் வழிமுறைகளைக் கண்டறிந்து, நமது அமைப்பின் பெயர், முகவரியுடன் விளம்பரத்தட்டி அமைக்க வேண்டும். அந்தந்த மாவட்டங்கள் அவரவர் சூழ்நிலைக்கேற்ப நிறைவேற்றுமாறு இந்த செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

10 ஊழலுக்கு எதிராக குரல் கொடுக்கக்கூடிய அனத்து ஜனநாயக, முற்போக்கு சமூக இயக்கங்களோடு ஒன்றுபட்டு தொடர்ந்து ஊழலுக்கு எதிராகக் கூட்டமைத்து பயணிப்பதென்றும் செயற்குழு முடிவு செய்கிறது.-

11. நேர்மையின் அடையாளமாகவும், நேர்மை முறையில் செயல்பட்டு, நாட்டுக்கு உழைத்தவர்களுக்கு சிலை வைத்து நீதி போதனைகளை ஊக்குவிக்க வேண்டுமென கோரிக்கை வைக்கப்படுகிறது. அரசியலில் இல்லாமல் நேர்மைக்காகப் போரடிய அதிகாரிகளைக் ( உதாரணம்: திரு குங்கா, நீதியரசர் ) கௌரவப்படுத்துமாறு இக்குழு வேண்டுகிறது. நேர்மைக்காக அரசியல் தலைவர்களை எதிர்ப்பதும் ஒரு சிறந்த சேவை தான்

12. இறுதியில் திரு நவீஸ் அஹமது அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

ஒப்பம்

V கார்த்திகை ராஜன்
பொதுச் செயலாளர்

.